# Educationalist Research Journal

(The BI - Annual Research Journal)

# கல்வியியலாளன் ஆய்விதழ்

## Chief Editor

Mr. P. Rajeswaran

Vol.6, April, 2017
ISSN 1800 - 1378

Educational Publication Centre
Jaffna, Sri Lanka.

# Educationalist Research Journal

**Chief Editor**
Mr. P.Rajeswaran, *Lecturer, Jaffna National College of Education, Kopay, Jaffna.*
*Teacher Educator (SLTES), B.A. (Hons), N.Dip.in Teach (Meit), P.G.D.E (Dist.)*
*M.ED (1st class), M.A. (Socio), M.A (Communication) Dip.in.media.*

**Review & Guidance**
Dr. (Mrs.) J. Rasanayagam, *Senior Lecturer, Department of Education, University of Jaffna.*
Prof. M.Sinnathamby, *Former Head, Department of Education, University of Jaffna.*

**Advisory Board**
Prof. Saba Jeyarasa, *Former Head, Department of Education, University of Jaffna.*
Pof. S. Sandarasegaram, *Former Dean, Faculty of Education, University of Colombo.*
Prof.M.Karunanithy, *Former Director, Department of Social science Edu, Faculty of Edu. University of Colombo.*
Prof. M. Selvarajah, *Former Head, Department of Education, Eastern University.*
Prof. K. Sinnathamby, *Former Head, Department of Education, University of Jaffna.*
Prof.T. Velnampy, *Dean, Faculty of Management Studies & commerce, University of Jaffna.*
Dr.(Mrs.) A. Sathiaseelan, *Head, Department of Education, University of Jaffna.*
Prof.P.Pushparatnam, *Department of History, University of Jaffna.*
Dr. T. Kalamany, *Senior Lecturer, Department of Education, University of Jaffna.*
Dr. T. Kamalanathan, *Former President, Jaffna National College of Education.*
Dr. K. T. Kaneshalingam, *Senior Lecturer, Department of Political Science, University of Jaffna.*
Dr. S. Arulmoly, *Head, Department of Education & Child Care, Eastern University.*
Mr. S. Amirthalingam, *President, Jaffna National college of Education, Jaffna.*
Dr. F.M. Nawastheen, *Senior Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Dr. T.Mugunthan, *Senior Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Mr. S.R.Sathiyenthirampillai, *Vice President, Jaffna National College of Education.*
Dr. B. Thanabalan, *Vice President, Jaffna National College of Education.*
Mrs. I.Selvarani, *Lecturer, National Institute of Education, Sri Lanka.*
Mr. S.Athirathan, *Lecturer, Department of Social Science Edu. University of Colombo.*
Mr. S. Paramanantham, *Vice president, Vavuniya National College of Education, Vavuniya.*
Mrs. S. Sivapatham, *Vice President, Jaffna National College of Education, Jaffna.*
Miss. M. Rajini, *Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Mr. S. Navaneethakrishnan, *Senior Assistant Librarian, University of Jaffna.*

**Educationalist Research Journal (ERJ) 2017, April**
Copy Right : To Chief Editor
Published by : Educational Publication Centre,
Jaffna, Sri Lanka.
Issn : 1800 - 1378
Price : 600/=
E-mail : educationalisteditor@gmail.com
T.P : 0776184437

All rights Reserved, No part of this publication may be reproduced, stored, retrieved or transmitted, in any form or by any means, without the prior permission of the copyright owner. All data, views, opinions and Informations published in this publication are the sole responsibilities of the authours.

**Contact** : Mr. P.Rajeswarn, Chief Editor, Educationalist Research Journal,
55/3, Play Ground Road, Kalviyankadu, Jaffna, Sri Lanka.
T.P : 0776184437, e-mail : educationalisteditor@gmail.com

# கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 6C யில் கல்விபயிலும் மெல்லக்கற்கும் மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்தல் - ஓர் செயல்நிலை ஆய்வு

நிசாந்தினி நித்லவர்ணன், நித்லவர்ணன், அ.

anithlavarnan@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பாடசாலைகளில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் செயல்நிலை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் கல்வித்துறையில் அளவுரீதியானதும் மற்றும் பண்புரீதியானதுமான அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும். மேலும் பாடசாலை எதிர்கொள்ளும் கல்விசார் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துக்கொள்ளவும் முடியும். தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடத்தில் தமிழ் மொழியறிவு மிகவும் குறைவடைந்து வருகின்றது. மேலும் அதிகம் தாய் மொழிப் பிரச்சினைகளை எதிர் கொள்ளும் மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமானதாகவில்லை. அந்தவகையில் இவ்வாய்வானது கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 6C யில் கல்விபயிலும் ஐந்து மெல்லக்கற்கும் மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்யும் நோக்கத்துடன் செயல்நிலை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. ஆய்வின் நிறைவில் மாணவர்களின் அடிப்படை எழுத்துத்திறன்கள் மற்றும் அடிப்படை வாசிப்புத்திறன்கள் மேம்பட்டிருந்ததை ஆய்வாளர்களால் உணரக்கூடியதாக இருந்தது. மேலும் மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தில் அடிப்படை எழுத்துத்திறன்கள் மற்றும் அடிப்படை வாசிப்புத்திறன்கள் என்பவற்றை உள்ளடக்கி நடாத்தப்பட்ட முற்சோதனைப்புள்ளிகளைவிடவும் பிற்சோதனைப் புள்ளிகள் அதிகரித்துக்காணப்பட்டன.

**பிரதான பதங்கள்: மெல்லக்கற்கும் மாணவர்கள், மொழித்திறன்**

## தற்காலத்தில் பாடசாலைகளில் செயல்நிலை ஆய்வுகளின் முக்கியத்துவம்

இலங்கைப் பாடசாலைக் கல்வித்துறையின் ஆய்வுகள் தினம் (Research Day) 15 மார்ச் 2017 அன்று முதன்முதலாக இலங்கையிலுள்ள அனைத்துப்பாடசாலைகளிலும் கொண்டாடப்பட்டது. கல்வித்துறையின் அளவுரீதியானதும் (Quantitative) பண்புரீதியானதுமான (Qualitative) அபிவிருத்திக்கு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுத்தல் அவசியமானதாகும். ஆய்வுகள் தினத்தன்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை ஆய்வின்பால் ஈடுபடுத்துவதற்கே இவ் ஆய்வுதினக்கொண்டாட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பரிசோதனை ஆய்வுகள் (Experimental Research) மற்றும் சமூகம்சார் ஆய்வுகளை (Social Research) பிரபல்யப்படுத்தி, ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்வதற்கு வழிகாட்டப்படுகின்றது. (இலங்கை கல்வி அமைச்சு, 2017)

## இடைநிலை வகுப்புக்களில் தமிழ் பாடத்தில் செயல்நிலை ஆய்வுகளின் தேவை

பாடசாலை மாணவர்களிடத்தில் தமிழ் மொழியறிவு மிகவும் குறைவடைந்து வருகின்றது. தற்காலத்தில் மாணவர்கள் எழுத்து மற்றும் இலக்கண, இலக்கியப் பிழைகளின்றி எழுதமுடியாது அவதியுறுகின்றனர். அதிகமான மாணவர்களின் எழுத்துக்களை ஏனையவர்களினால் வாசிக்கவும் முடிவதில்லை. மேலும் தமிழ் எழுத்துக்களை வாசிப்பதிலும் இடைநிலைவகுப்பு மாணவர்கள் அதிகம் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். மேலும் அதிகம் மொழிப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமானதாகவில்லை. எனவே பாடசாலை மாணவர்களின் தமிழ் மொழியறிவை விருத்தி

செய்யும் விசேட மொழிவிருத்திச்செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டும். (வீரகேசரி, *13-04-2017)*

**இச்செயற்றிட்டத்தின் அறிமுகம்**

தமிழ் மொழிக்கல்வியில், தற்காலத்தில் அடிப்படை மொழித்திறன் கூறுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மொழித்திறன்களை ஒருவர் விருத்தி செய்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். எனவே தமிழ்மொழிப்பாடத்திட்டங்களில் அடிப்படை மொழித்திறன் கூறுகளைப் பெரிதும் உள்ளடக்கி தொடர்புாடல் தேர்ச்சிகளை அடையப்பெறுவதற்கு வழிவகுக்கும் போக்குக்காணப்படுகின்றது.

செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கும் அடிப்படை மொழித்திறன்களை பெற்றுக்கொள்ளல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நான்கு மொழித்திறன்களிலும் தேர்ச்சிபெறுதலே மொழிகற்றலின் அடிப்படை நோக்கமாகும். மேலும், தமிழ்மொழி பேச்சுவழக்கும், எழுத்துவழக்கும் கொண்ட மொழியாகும். இவ்விரண்டையும் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவதற்கும் மொழித்திறன்களில் தேர்ச்சிபெறவேண்டியுள்ளது.

மொழி கற்பிக்கும் ஆசிரியர், கற்பவரின் மொழித்தேவை என்ன என்பதை இனங்கண்டு கொள்ளுதல் அவசியமாகும். மொழியைக்கற்பவர், மொழியைப்பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல், மொழியை விளங்கிக்கொள்ளும் நிலையைப்பெறுதல் என்பவற்றையே தனது பிரதான மொழித்தேவையாகக் கொள்கின்றனர். இம்மொழித்தேவையைப் பூர்த்திசெய்வதிலேயே, ஒருவரின் தனியாள் விருத்தியும், சமூகவிருத்தியும் தங்கியுள்ளன. அத்துடன் மொழியைப் பயன்படுத்தும்போதுதான் அம்மொழி பன்முகப்பட்ட வளர்ச்சி பெறுகின்றது.

தரம் - 6 இல் கல்விபயில வருகின்ற மாணவர்கள், முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். ஏனெனில் ஆரம்பக்கல்வியில் இருந்து இடைநிலைக்கல்விக்கு பிரவேசிப்பவர்களாக காணப்படுகின்றனர். (Transitional Grade) இவர்கள் ஆரம்பக்கல்வியில் அடையவேண்டிய தேர்ச்சிகளை அடையாமல்விடும்போது இடைநிலைக்கல்வியைப் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வார்கள். அதிலும் தாய்மொழித்திறனில் ஏற்படும் தேர்ச்சியின்மையானது அவர்களின் ஏனைய செயற்பாடுகளிலும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும்.

கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் - 6 அனுமதி பெற்றது தொடக்கம், அவர்களை பரிகாரகற்பித்தல் நோக்கத்திற்காக வைத்த முற்சோதனையின் புள்ளிகளின் அடிப்படையிலும், தமிழ் ஆசிரியராக அவர்களுக்கு மூன்றுமாதங்கள் கற்பித்த அனுபவத்திலிருந்தும், அவர்களில் ஐந்து மாணவர்கள், ஆரம்பநிலையில் அடையவேண்டிய தமிழ் மொழித்திறன் தேர்ச்சிகளை அடையாதிருந்தமை இனங்கணப்பட்டது. அவர்களிடம் மேற்படி திறன்களை விருத்திசெய்வதற்காக இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**பாடசாலைச்சமூகம் தொடர்புபட்டவகையில் இச்செயற்றிட்டத்தின் முக்கியத்துவம்**

தற்போது தரம் - 6 இல் கல்விபயிலும் மாணவர்கள், இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம், இடப்பெயர்வு மற்றும் நிவாரணக்கிராமங்களில் வாழ்ந்ததன் காரணமாக

இரண்டரை தொடக்கம் மூன்று வருடங்கள் தமது ஆரம்பப்பாடசாலைக்கல்வியை முற்றாக இழந்திருக்கின்றனர். (வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - 2014)

இதனால் ஆரம்பவகுப்புக்களில் அடையவேண்டிய அடிப்படைத்தேர்ச்சிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் இவர்களுக்கு கிடைக்கவில்லை. இச்செயற்றிட்டத்தின்மூலம் பின்வரும் பயன்கள் கிடைத்தன.

- மெல்லக்கற்கும் மாணவர்கள் ஆரம்பநிலையில் அடையாதிருந்த அடிப்படை மொழித்தேர்ச்சிகளை அடைவதற்கான வாய்ப்பு ஏற்படும்.
- தமிழ்ப்பாடம் மட்டுமன்றி, ஏனையபாடங்களின் கற்றலிலும், மொழித்திறன் குறைபாட்டால் ஏற்படும் தடைகள் நீங்குவதனால், அவர்கள் அப்பாடங்களையும் வினைத்திறனுடனும் ஆர்வத்துடனும் கற்பார்கள்.
- மாணவர்களின் பாட அடைவு அதிகரிக்கும்.
- மாணவர்களின் கற்றலின்மீதான ஆர்வம் அதிகரிக்கும்.


**செயற்றிட்டத்தின் நோக்கங்கள்**

- மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு அடிப்படை மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்தல்.
- அடிப்படை எழுத்துத்திறன்களை மேம்படுத்தல்
- அடிப்படை வாசிப்புத்திறன்களை மேம்படுத்தல்
- மேற்குறிப்பிட்ட மாணவர்களின் தமிழ்ப்பாட அடைவையும், ஏனைய பாடஅடைவையும் அதிகரித்தல்.
- மாணவர்களுக்கு கற்றல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தல்.
- எனது பரிகாரக்கற்பித்தல் வினைத்திறனை மேம்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு செயல்நிலை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.


- செயற்றிட்டம் தொடர்பாக சக உதவி ஆசிரியருடன் கலந்துரையாடப்பட்டது.




- செயற்றிட்டம் மேற்கொள்வதற்கான அனுமதி பாடசாலையிலிருந்தும், மாணவர்களிட மிருந்தும் அவர்களின் பெற்றோரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- செயற்றிட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக மெல்லக்கற்கும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட் டனர்.
- பெற்றோருடன் செயற்றிட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இச்செயற்றிட்டத்தில் அவர்களின் பங்களிப்பு, செயற்றிட்டத்தின் பயன்பாடு என்பன தொடர்பாக விளக்கமளிக் கப்பட்டது.



- மாணவர்களுக்கான கற்றல் வளங்கள் வழங்கப்பட்டது. (தமிழ் நெடுங்கணக்கு, உறுப்பெழுத்து கொப்பி மற்றும் எழுதுகருவிகள்)






- மாணவர்களும் எடுத்து அட்டைகளைப் பயன்படுத்தி தமிழ் திறன் கண்டு கற்பிக்கப்பட்டது.




- உறுப்பெழுத்துக் கொப்பியைப் பயன்படுத்தி, எழுத்துக்களை எழுத்துப் பொறிமுறைக்கமைவாகவும் மற்றும் உறுப்பமையவும் எழுதிப்பழக்கப்பட்டது.





- உச்சரித்து வாசிக்கப் பழக்கப்பட்டது. குறியீடுகளை அனுசரித்து வாசித்தல், பொருளுடையதாக வாசித்தல் என்பன பழக்கப்பட்டது.



**செயற்றிட்டத்தின் விளைவு**

மாணவர்களின் அடிப்படை எழுத்துத்திறன்கள் மற்றும் அடிப்படை வாசிப்புத்திறன்கள் மேம்பட்டிருந்ததை ஆய்வாளர்களால் உணரக்கூடியதாக இருந்தது. மேலும் மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தில் அடிப்படை எழுத்துத்திறன்கள் மற்றும் அடிப்படை வாசிப்புத்திறன்கள் என்பவற்றை உள்ளடக்கி நடாத்தப்பட்ட முற்சோதனைப்புள்ளிகளைவிடவும் பிற்சோதனைப்புள்ளிகள் அதிகரித்துக்காணப்பட்டது. முற்சோதனை மற்றும் பிற்சோதனைப்புள்ளிகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை-1: மாணவர்களின் முற்சோதனை மற்றும் பிற்சோதனைப்புள்ளிகள்**

| மாணவன்/மாணவி | முற்சோதனைப்புள்ளி | பிற்சோதனைப்புள்ளி |
|---|---|---|
| A | 24 | 50 |
| B | 25 | 62 |
| C | 18 | 46 |
| D | 34 | 60 |
| E | 39 | 70 |

**எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தத்தக்க செயற்றிட்டங்கள்**

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களின் மொழியறிவை விருத்திசெய்வதற்காக பின்வரும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். (வீரகேசரி,13-04-2017)

- கையெழுத்துச்சஞ்சிகை மற்றும் கையெழுத்துப்பத்திரிகை வெளியிடல்
- மொழியறிவை விருத்திசெய்யும் புதிர்ப்போட்டி நிகழ்வுகள் நடாத்துதல்
- கலை கலாசார நிகழ்வுகளை நடாத்துதல்
- மாணவர்களின் பேச்சாற்றலை வளர்க்கும் மாணவர் மன்றங்களை ஏற்பாடுசெய்தல்

**முடிவுரை**

தற்காலத்தில் இலங்கைப்பாடசாலைகளில் கல்வியியல் ஆய்வுக்கலாச்சாரம் கட்டியெழுப் பப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கத்திற்காகவே பாடசாலைகளில் ஆய்வு தினம் கொண்டாடப்படுகின்றது. இந்தப்பின்னணியில் பாடசாலை ஆசிரியர்கள் அன்றாட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு செயல்நிலை ஆய்வுகளில் (Action Research) ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள், தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மொழியறிவு மற்றும் மொழிவிருத்திச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி மாணவர்களின் மொழியறிவினை விருத்திசெய்வது காலத்தின் தேவையாகும்.

**உசாத்துணைகள்**


- Nithlavarnan, A.(2015) Teaching - Learning Tamil in Sri Lanka; Current Practices and Challenges, Cintanai, Refreed Journal, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka, 2005(2015)Vol.02, XV, April-May-2015.
- Nithlavarnan, A.(2012) Problems and remedies regarding Teaching-Learning Tamil in Sri Lanka, Conference Proceedings, International Conference on Tamil Education, International Movement for Tamil Culture, Canada, pp.57-59.
- வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு – *(2014)*, வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு நெறிப்படுத்தும் குழு, வடமாகாணக்கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.
- "இலங்கைப்பாடசாலை கல்வித் துறையின் ஆய்வுகள் தினம் - மார்ச்-*15*", இலங்கை கல்வி அமைச்சு,*(2017)* இசுறுபாய, பத்தரமுல்ல.
- "கிழக்குப்பாடசாலைகளில் மொழிவிருத்திச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்", *(வீரகேசரி,13-04-2017)*
- செயல்நிலை ஆய்வு கைநூல் - *(2015 )*(Action Research Hand Book – 2015), தேசிய கல்வி நிறுவகம், இலங்கை, Retrieved from http://www.nie.sch.lk/resource/ARhand_book.pdf on 19-04-2016.